| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர். சி. உஷாராணி,<br>எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண். 084862 / F1 / 2019** **நாள் : 11.02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் 2020 – முதன்மை விடைத்தாட்கள் வழங்குவதற்கான அறிவுரை வழங்குதல் – சார்பு.

*********

நடைபெறவுள்ள மார்ச் 2020 இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள சமூக அறிவியல் பாடத்திற்கான முதன்மை விடைத்தாட்கள் தொடர்பான விவரம், தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்களை வழங்கும் பொருட்டு பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வில் புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு இவ்வாண்டிற்கென அச்சிடப்பட்டுள்ள சமூக அறிவியல் பாடத் தேர்வுக்கு இரண்டு இந்திய வரைபடங்கள், ஒரு தமிழ்நாடு வரைபடம் மற்றும் ஒரு உலக வரைபடம் கொண்ட SSLC – Social Science முதன்மை விடைத்தாளை மட்டும் வழங்க வேண்டும்.

**இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வில் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு மார்ச் 2019 தேர்விற்கு வழங்கப்பட்ட சமூக அறிவியல் பாடத் தேர்வுக்கு இரண்டு இந்திய வரைபடங்கள், ஒரு ஆசியா வரைபடம் மற்றும் ஒரு ஐரோப்பா வரைபடம் ஆகியவை அச்சிடப்பட்டுள்ள SSLC – Social Science முதன்மை விடைத்தாளை மட்டும் வழங்க வேண்டும்.**

மேலும், இவ்வாண்டு மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதும் தேர்வர்களின் முதன்மை விடைத்தாளுடன் வைத்து தைக்க வேண்டிய வரைகட்டத்தாள் மற்றும் வரைபடம் குறித்த விவரம் தேர்வு மைய தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கும்பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்படுகிறது என தெரிவிப்பதுடன் முதன்மை விடைத்தாளினை முகப்புத்தாளுடன் தைக்கும் பணியினை உடன் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்களுக்கு உடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>இணைப்பு</u>** : மேற்குறிப்பிட்டவாறு

ஒம்/–
**இயக்குநர்**

**<u>நகல் :</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – இவ்விவரத்தினை அனைத்து மேல்நிலை தேர்வு மையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
3. கண்காணிப்பாளர்கள், B1, H1, & K பிரிவுகள் (அலுவலகம்).

## HIGHER SECONDARY FIRST YEAR EXAMINATION, MARCH– 2020

## NEW SYLLABUS

| Subject | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Statistics | One Graph Sheet. |
| Business Mathematics and Statistics | One Graph Sheet. |
| History | One Ancient India Map |
| Geography | One World Outline Map |

## HIGHER SECONDARY FIRST YEAR EXAMINATION, MARCH– 2020

## OLD SYLLABUS (Private Candidates)

| Subject | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Statistics | Two Graph Sheets. |
| Business Mathematics | One Graph Sheet. |
| History | 1. One India river Map<br>2. One South India river Map |
| Geography | One World Outline Map |

## HIGHER SECONDARY SECOND YEAR EXAMINATION, MARCH – 2020

## NEW SYLLABUS

| Subject | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Statistics | Two Graph Sheets. |
| Business Mathematics and Statistics | One Graph Sheet. |
| History | One India Map |
| Geography | One World Outline Map |

## HIGHER SECONDARY SECOND YEAR EXAMINATION, MARCH – 2020

## OLD SYLLABUS (Private Candidates)

| Subject | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Business Mathematics | One Graph Sheet. |
| History | One India Map |
| Geography | One World Outline Map |

## SSLC EXAMINATION, MARCH – 2020

| Subject | New Syllabus | Old Syllabus |
|---|---|---|
| தமிழ் | SSLC - Tamil (மார்ச் 2020 தேர்வுக்கு புதிதாக அச்சிடப்பட்டது) | SSLC - Tamil (மார்ச் 2020 தேர்வுக்கு புதிதாக அச்சிடப்பட்டது) |
| ஆங்கிலம் | SSLC – Language | SSLC – Language |
| கணிதம் /அறிவியல் | SSLC | SSLC |
| பகுதி IV மொழிப்பாட தேர்வு | SSLC – Language | SSLC – Language |
| சமூக அறிவியல் | SSLC – Social Science (மார்ச் 2020 தேர்வுக்கு புதிதாக அச்சிடப்பட்டது) | SSLC – Social Science (கடந்த ஆண்டில் இருப்பு உள்ளது) |

ஒம்/–

**இயக்குநர்**